


சிறந்த ஓவியக் கலைஞன் - இந்தியாவில் திரைப் படங்கள் தயாரிக்கும் ஏ. வி. எம் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணத்தில் செல்லம்ஸ் ஸ்ரூடியோ ஆகியவற்றில் பணிபுரிந்தவர்; மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்களில் ஓவியங்கள் வரைந்தவர். மின் இணைப்பு வேலைகள் செய்பவர். இசைத்துறையில் நாட்டமுள்ளவர். யாழ்நகர் கண்ணன் இசைக்குழுவில் அங்கம் வகித்தவர். இவ்வாறெல்லாம் பல்வேறு துறைகள் மூலமாக மக்களுக்கு அறிமுகமான பகத்சிங் மட்டக்களப்பு பிராந்திய போராளிகளுக்கு விடுதலை விரும்பியாகவே அறிமுகமானார்.

விசேட அதிரடிப்படையினர் அடிக்கடி வந்து போகும் வந்தாறுமூலை அம்பலத்தடியில் ஆபத்தைப் பொருட்படுத்தாது இயக்கப் பணிகளுக்காக நிற்பவர் இவர்தான். சுமார் 20மைல் தூரத்திலுள்ள பயிற்சி முகாமுக்கு தேவையான பொருட்கள் கொண்டு செல்லவேண்டும். வடதமிழீழத்துக்கும் தென் தமிழீழத்துக்குமான போக்குவரத்துப் பணிகளுக்கான முன்னேற்பாடுகள் செய்யவேண்டும். இப் பணிகளில் ஈடுபடுவோருக்கான உணவு வசதிகள் செய்யவேண்டும். அவர்கள் பிரதான வீதியைக் கடப்பதற்கு 'சென்றி' நிற்கவேண்டும். அதிரடிப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அனுப்ப வேண்டும் போன்ற இன்னோரன்ன பணிகளுக்காக அவர் அங்கே நிற்பார்.

சிலவேளை நித்திரை செய்வதற்கே நேரம் கிடைக்காது. வந்தாறுமூலைப்பகுதியில் போராளிகள் தங்க வேண்டி ஏற்பட்டால் மணித்தியாலத்திற்கு ஒருவர் என்ற ஒழுங்கில் 'சென்றியில்' நிற்பர். ஆனால் இவருக்கோ நேரக்கணக்குக் கிடையாது, எல்லோர் சென்றியிலும் துணைநிற்பார். போராளிகளை அடிக்கடி கேட்பார்; "எனக்கு றெயினிங் தாங்கோ" . ஆனால் அவரது வாழ்நாளில் இதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவர் பயிற்சி எடுக்கும் காலத்தில் இவரைப் போல ஈடு செய்து பணியாற்றக் கூடியவர்கள் வேறு எவரும் இல்லை என்பதால் இவரைப் பயிற்சிக்கு அனுப்ப முடியவில்லை.

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மட்டக்களப்பு பகுதி ஆலயங்களில் ஓவியம் வரையும் வேலைக்காகச் சென்றார். அங்கேயே திருமணம் செய்து கொண்டார். இல்லற வாழ்வில் இரு குழந்தைகளுக்கு தந்தையுமானார். மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பஸ்தராக இருந்து கொண்டே முழுநேர உறுப்பினராக வர விருப்பம் தெரிவித்த முதல் ஆள் இவர் தான்.

போராளிகளுக்கு ஆபத்தென்றால் அவர்களுக்கு ஏதாவது தேவை என்றால் இவர் மனம் அமைதியாக இருக்காது. ஒரு முறை ஈரலிக்குளம் பகுதி சிறிலங்காப்படையினரால் முற்றுகையிடப்பட்டது. அப்பகுதியெங்கும் குண்டுச்சத்தங்கள் -வேட்டோசைகள் கேட்டன. அங்கு தான் போராளிகளின் பிரதான முகாம் இருந்தது. முற்றுகைக்குள்ளான போராளிகள் காட்டில் வழி தெரியாது அலைந்து திரிகின்றார்களோ என இவர் தவிப்புடன் அலைந்து திரிந்தார். முற்றுகை ஆரம்பித்த நேரம் தொடங்கி சிறிலங்காப்படையினர் விலகிச் சென்றதுவரை இவர் போராளிகளைத் தேடிக் கொண்டிருந்தார். எல்லோரும் பத்திரமாகத் தப்பிவிட்டனர். ஒருவருக்குக் கூட ஆபத்தில்லை என்று அறிந்தபின்னரே இவருக்கு நிம்மதி ஏற்பட்டது.

இதற்கிடையில் போராளிகளுக்கான உணவுக்கும் ஏற்பாடு செய்துவிட்டார். ஒவ்வொரு போராளிகளையும் தான் நேரே கண்டு அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்த பின்னரே, தான் இவ்வளவு நேரமும் சாப்பிடவில்லை என்பதை ஒப்புக்கொண்டார்.

இயக்க கட்டுப்பாடுகளில் மிகுந்த நம்பிக்கை உடையவர் இவர். உத்தரவு பெறாமல் இயக்கத்தின் எந்தப் பொருளையும் தொடக்கூடாது என்ற கருத்துடையவர். 1985ஆம் ஆண்டுக்காலத்தில் இயக்கத்தின் வள்ளங்கள் இவரது பாதுகாப்பிலேயே இருந்தன. அவ்வருடத்தின் மழைக்காலத்தில் போராளிகள் தங்கியிருந்த பகுதியைச் சுற்றியெங்கும் வெள்ளம் காணப்பட்டது. தரை வழித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அவர்களுக்கு உணவுப்பொருள்கள் தேவை. எனவே மழையில் நனைந்தபடியே ஒரு தனியார் வள்ளத்தை ஒழுங்குபடுத்தி அதில் பொருள்களை ஏற்றிக்கொண்டு போராளிகள் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றார். அங்கிருந்த போராளிகள் 'ஏன் அண்ணை நம்மட வள்ளத்திலேயே வந்திருக்கலாமே' என்று கேட்டதற்கு 'இயக்கத்தின்ரை வள்ளம் -நீங்கள் இருக்கறபோது நான் எதுவும் செய்யலாம் இல்லாத இடத்தில நான் அதுக்கு ஏற்றமாதிரி நடக்கவேணும். அது தான் வேறை வள்ளம் ஒழுங்குபடுத்தினனான்' என்றார். அவ்வளவு கட்டுப்பாடானவர் இவர்.

கலைஞனுக்கும் போராளிக்குமுரிய அடிப்படைத் தகுதியான மென்மையான மனம் இவரிடமும் காணப்பட்டது. போராளிகளுக்கு ஆபத்து - அவர்களது மரணம் -இப்படியான செய்திகளை தாங்கக்கூடியவரல்ல. ஒருமுறை மட்டக்களப்பு இருதயபுரம் பகுதி முற்றுகையிடப்பட்டது. முற்றுகையிடப்பட்ட பகுதிக்குள் எமது போராளிகள் இருந்தனர். அப்பகுதி முற்றுகையிடப்பட்ட செய்தி கிடைத்தபோது ஒரு போராளி சொன்னான் 'நம்மட ஆக்களும் உள்ள இருக்கிறானுகள். ஆர் ஆர் மண்டையைப் போடுறானுகளோ' -இவர் பதறினார். 'தம்பி விளையாட்டுக்குக்கூட அப்பிடிச் சொல்லாதேங்கோ. அப்படி ஏதும் நடக்கக்கூடாது தம்பி' என்று சொல்லிவிட்டு போராளிகளின் நலனுக்காக வேண்டி கிருஸ்ணர் ஆலயத்தை நோக்கிச் சென்றார்.

காட்டிக் கொடுக்கும் முகமூடிக் கூட்டங்கள் இழைத்த துரோகங்களுக்குத்தான் நாம் இவரை இழந்த வரலாறும் சேர்ந்திருக்கிறது. இவருக்கெனவே அந்த முற்றுகை நடத்தப்பட்டது.

'சிங்கோ மாஸ்டர் - சிங்கோ மாஸ்டர்' என்று கேட்டபடியே வந்த அதிரடிப்படையினர் இவர் தன்பெயர் பகத்சிங் என்று சொன்னதும் விட்டுவிட்டனர். ஆனால் அந்தத் துரோகி இவரது மரணத் திகதியை நிர்ணயித்து விட்டான். இன்பதுன்பங்களில் பங்கெடுத்த மனைவி -முத்தமழையால் இவரை நனைக்கும் குழந்தைகள் முன்னிலையில் இவர் மோசமாகத் தாக்கப்பட்டார். அந்தக் காட்சி தான் சிங்கோ மாஸ்டர் குடும்பத்தில் நினைவில் உள்ளது. அதன் பின் அவரை அவர்கள் காணவில்லை.



## சிங்கோ மாஸ்டர்

*1985ஆம் ஆண்டுக் காலத்தில் வந்தாறுமூலை அம்பலத்தடியில் இவரைப் போலவே இன்னொருவரும் காணப்படுவார். அவர் பெயர் கயிலாயத்தார். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர். அடுக்கு மொழியில் பேசுவார். ஒரு நாள் சில இளைஞர்கள் திடீரென ஓடினர், கயிலாயத்தார் என்ன என்று கேட்டார். "எஸ். ரி. எவ். வாறான்" என்று சொன்னார்கள். அவர்கள் ஓடி மறைந்ததும் ஓடியவர்கள் யார் என்று கேட்டார் கயிலாயத்தார் 'ரெலோ' என்றனர் அங்கிருந்தவர்கள். உடனே அவர் "நாட்டில் பயங்கரவாதிகள் சரிபாதி, பயந்தோடுபவர் அதில்பாதி" என்றார். அதைக்கேட்டு சிங்கோ மாஸ்டர் சிரித்தார்.*

*அன்று மக்கள் மத்தியில் நின்று கொண்டு சிறிலங்கா படையினரைக் கண்டு ஓடியவர்கள் இன்று அதே படையினருடன் மக்களை வேட்டையாட அந்த இடத்திற்கு வருகின்றார்கள். எனினும் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஓடுகின்றார்கள். இன்று கயிலாயத்தார் அங்கு காணப்படுவதும் இல்லை அவரது அடுக்கு மொழியைக் கேட்டு ரசிக்க சிங்கோ மாஸ்டரும் இல்லை.* ■

# அடக்குமுறைக்கு எதிராக எழுதுகோல் மூலம் போராடியவர்

■ கோவை மகேசனுக்கு அஞ்சலி

தமிழர்களை அடக்கி ஆள்வதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் சிறிலங்கா அரசின் அடக்குமுறைக்கு எதிராகவும் இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கு எதிராகவும் எழுதுகோல் கொண்டு போராடியவர் அமரர் கோவை மகேசன். "சுதந்திரன்" மூலம் தாம் ஆற்றிய பணி தடைப்பட நேர்ந்ததும் "வீரவேங்கை" பத்திரிகையைத் தொடர்ந்து தமிழ் இனத்தின் உரிமைக்குரலாக ஒலித்தார். இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. ஆ. தேவர்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற இனமான எழுத்தாளர் கோவை மகேசனின் நினைவஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ் மக்களின் மானத்தையும் வீரத்தையும் உலகம் எங்கும் பறைசாற்றும் இதழாக வீரவேங்கை விளங்கியது. தமிழீழத்தை மீட்கும் வரை விடுதலைப்புலிகளின் வலது கரமாக இருந்து கடைசி மூச்சுவரை தனது எழுத்துப் பணி தொடரும் என்ற உறுதியோடு அவர் "வீரவேங்கை"யை நடத்தினார். தமிழினத்தின், தமிழீழத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனே என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தனது 14 ஆவது வயதிலேயே தமிழ்ப் பற்றும் தமிழ் மண் பற்றும் மிக்கவராக விளங்கி கோப்பாய் தொகுதியில் போட்டியிட்ட திரு. வன்னியசிங்கத்தின் மேடைகளில் கோவை மகேசன் பேசி வந்தார். சுதந்திரனில் எழுதுவினைஞராகச் சேர்ந்த அவர் ஆறு ஆண்டுகளில் அதன் ஆசிரியராக உயர்ந்தார் -என்று கூறினார்.

### துணிச்சலுடன் எழுதியவர்

திரு. யோகரத்தினம் யோகி தமது பேச்சின் போது கூறியாதாவது. கோவை மகேசன் தமிழீழக் கொள்கையில் உறுதியாக நின்றவர். இந்த உரிமைப் போராட்டத்தை ஒரு காலத்தில் ஆதரித்து உணர்ச்சி பூர்வமாக பேசியவர்களில் சிலர் பின்னர் போராட்டத்தை கைவிட்டுவிட்டார்கள். ஆனால் அமரர் கோவை மகேசன் அவர்கள் எமக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் எம் மண்ணிலே இந்தியப் படைகள் செய்த கொடுமைகளை எதுவித பயமும் இன்றி துணிச்சலுடன் கண்டித்தவர். இவருடன் சேர்ந்து அவரது மனைவியும் உதவியாக இருந்தார். இருவரும் சேர்ந்து பத்திரிகை விற்பதற்காக வெளியில் செல்வதுண்டு. நாம் திம்புப் பேச்சுவார்த்தைக்கு சென்றதை அவர் வீரவேங்கையில் கண்டித்து எழுதினார். திம்புப் பேச்சுவார்த்தைக்கு ஈழப் போராளிகள் சென்றதை நினைத்து எனது மனம் நிம்மதியிழந்து தவிக்கின்றது. உலகிலே வாழுகின்ற ஆறுகோடி தமிழர்களும் தம்பி பிரபாகரன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அவர் தமிழீழ இலட்சியத்தை கிஞ்சித்தும் விட்டுக்கொடுக்க மாட்டார் என்பது எனது நம்பிக்கையாகும். -என்று எழுதினார். இது அவருடைய தமிழீழ இலட்சியப் பற்றையும், எமது இயக்கம் போராட்டத்தைக் கைவிட்டால் என்ன நடக்கும் என்ற பயத்தையும் எடுத்துக் காட்டியது. -என்று கூறினார். மாமனிதர் எஸ். ரி. அர்சு, சா. அ. தர்மரத்தினம், க. சொக்கலிங்கம், பொன். பூலோகசிங்கம், ஐயா சச்சிதானந்தம் ஆகியோரும் அஞ்சலி உரைகள் ஆற்றினர். அமரர் கோவை மகேசனின் சகோதரர் அவரின் படத்துக்கு மாலை அணிவித்து குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். ■



### முஸ்லிம் காடையரால் தமிழர் துன்புறுத்தல்

திருமலை மாவட்டத்தின் மூதூர் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் தமிழ் மக்களுக்கு வைத்திய வசதிகள் மறுக்கப்பட்டு வருவதுடன் வைத்தியசாலைக்கு தமிழ் மக்கள் செல்லும் போது முஸ்லிம் காடையர்களால் பெரிதும் துன்புறுத்தப்படுவதுடன், வைத்திய வசதிகள் அளிக்கப்படுவதில் பெரிதும் வேறுபாடுகள் காட்டப்படுவதுடன் 'முஸ்லிம், சிங்களவர்களுக்குமே அங்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.